**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 107/2017**

PW1 – குருமூர்த்தி த/பெ நாராயணசாமி
நாள் – 21.02.2024.

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை தொடர்ச்சி :**

06.02.2018 தேதியிட்ட 1–ம் வாதியின் இறப்புச் சான்றின் உண்மை நகலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 25.11.2019 தேதியிட்ட 1–ம் வாதியின் வாரிசு சான்றின் இணையவழி நகலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 04.01.2017 தேதியிட்ட திருவெண்காடு காவல் நிலையத்தால் வழங்கப்பட்ட புகார் ஏற்பு ரசீதின் அசலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** (புகார் மனு தாக்கல் செய்யவில்லை என பிரதிவாதி தரப்பில் ஆட்சேபனை செய்யப்பட்டது. ஆட்சேபனையின் பேரில் குறியீடு செய்யப்படுகிறது) மேற்படி ஆவணங்களை ஏற்றுக்கொண்டு தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.